**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,கோத்தகிரி</u>**

**O.S.No. 10 /2024**

**2025 -ம் வருடம் ஜூன் திங்கள் 20ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி சாட்சி PW1 ஆக நிலை 3 பெஞ்ச் கிளர்க் திருமதி. M. திலகவதி என்பவரால் சத்தியபிரமாணம் செய்து விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.**

**பெயர் : ராமச்சந்திரன்**

**த/பெ : முத்தன்**

**கிராமம் : கோடநாடு, காந்திநகர்**

**தாலுக்கா : கோத்தகிரி**

**தொழில் : தொழிற்சாலை பணியாளர்**

**வயது : 53**

---

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை (PW 1) 11.59 AM.</u>**

1. என் அப்பா பெயர் முத்தன் என்றால் சரிதான். என் அப்பா எப்பொழுது இறந்தார் என்பதைக் குறிப்பிட்டும் அவரது வாரிசுகள் யார்யார் என்று குறிப்பிட்டும் வழக்கில் சொல்லவில்லை என்றாலும் அது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் அப்பாவிற்கு 31.8.1986 ல் அரசாங்கத்தால் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, 26.08.1986 பட்டா கொடுத்தார்கள். மேற்படி பட்டாவை நான் வைத்துள்ளேனா என்றால் தேடி பார்க்கவேண்டும். என் அப்பா 4/116 என்ற எண்ணுள்ள வீடு கட்டி

அதில் நாங்கள் குடியிருந்து வந்தோம் என்றால் சரியல்ல. கடந்த 1986ல் இருந்து வரிகட்டி வருகிறார் என்றால் இல்லை, அப்பா கட்டிய வீடு இடிந்திருந்தது. நான் தாக்கல் செய்த என் அண்ணன் அனுமன் எழுதிக் கொடுத்த தானப் பத்திரம் வா.த.சா.ஆ.1 ன் முதல் பக்கத்தில் நமது தகப்பனார் முத்தன் என்பருக்கு சொத்து பாத்தியப்பட்டதும், அவரது அனுபவத்திலும் சுவாதினத்திலும் இருந்து வந்ததும், மேற்படி நமது தந்தை அவரது ஆயுள் காலத்தில் எந்தவித ஏற்பாடும் செய்யாமல் காலமாகிவிட்டார் என்று குறிப்பிடப்பட்டது என்று சொன்னால் சரிதான்.

2. என் அப்பாவிற்கு எத்தனை பெண் மற்றும் ஆண் குழந்தைகள் என்றால் மொத்தம் 9 நபர்கள் ஆவோம். சீதா, விஜயராணி, ஜெயம்மாள், அனிமி ஆகியோர்கள் 4 பெண் பிள்ளைகள் என்றால் சரிதான். ராஜன், அனுமன், புட்டுமாதன், கிருஷ்ணன், ராமச்சந்திரன் ஆகிய நான் ஆகியோர்கள் ஆண் பிள்ளைகள் ஆகும். இந்த வழக்கில் மேற்படி நபர்களை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

**Sd/- G. Amirdham, 20.06.2025.**
**Judicial Magistrate,**
**Kotagiri**